RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் மேலாண்மையும், உளவியல் நல்வாழ்வும்

**இரா. சீமா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, மீனம்பாக்கம், சென்னை-61, இந்தியா

# Management and Psychological Well-Being in Sangam Literature

**R. Seema** [a, *]

[a] Department of Tamil, Agurchand Manmull Jain College, Chennai-61, India

* Corresponding Author: seema.r@amjaincollege.edu.in

**ABSTRACT**

Management is both an art and a science that enables an organization to achieve its objectives by systematically planning, organizing, directing, and controlling human resources, financial resources, technology, and other organizational assets. The application of psychological principles in the workplace helps to understand human behavior, leadership, and group dynamics, thereby enhancing employee performance and facilitating the achievement of organizational goals. According to Sigmund Freud, dreams reveal the hidden thoughts and desires embedded in the human subconscious. Likewise, management, as an essential component of administration, incorporates the planning and effective utilization of human resources, reflecting a close relationship between management and psychology. Peter Drucker defined management as the process of accomplishing tasks efficiently and effectively, while Frederick Winslow Taylor, regarded as the father of scientific management, formulated several management principles that contributed significantly to organizational productivity and industrial development. Based on the concept that management involves the systematic execution of planned activities, planning is understood as the process of establishing objectives with future needs in mind and designing appropriate strategies to achieve them. This article examines the concepts of management and psychological well-being in the context of Sangam literature, exploring how principles of planning, leadership, human behavior, and mental well-being are reflected in the social and ethical values of the Sangam age.

**Keywords:** Sangam Literature, Organizational Goals, Development, Management.

## முன்னுரை

ஒரு நிறுவனம் தனது குறிக்கோளை அடைய, மனிதவளம், நிதி, தொழில்நுட்பம் மற்றும் பிற வளங்களை திட்டமிட்டு ஒழுங்கமைத்து, வழிநடத்தி கட்டுப்படுத்தும் ஒரு கலை அறிவியல் மேலாண்மை ஆகும். பணி செய்யும் இடத்தில் மனித நடத்தை, தலைமைத்துவம், குழு இயக்கவியல் ஆகியவற்றைப் புரிந்து கொண்டு, ஊழியர்களின் திறனை மேம்படுத்தவும், நிறுவன இலக்குகளை அடையவும் உளவியல் கொள்கைகள் பயன்படுகிறது "கனவு காண்பவர் தமது அடி மனதில் தம்மை பற்றி புதைந்து இருப்பவற்றை வெளிப்படுத்தும் செயலை கனவு" என்று உரைத்தார் சிக்மண்ட் பிராய்டு. மனித வளத் தேவைகளுக்கான திட்டமிடலை உள்ளடக்கிய நிர்வாகத்தின் ஒரு பகுதியே மேலாண்மை.

இது உளவியலுக்கு இடையிலான ஒருங்கிணைப்பைக் குறிக்கிறது. ஒரு காரியத்தை செய்து முடிப்பது தான் மேலாண்மை என நிர்வாக குருவான பீட்டர் டிரக்கர் கூறுகிறார். மேலாண்மை அறிவியலின் தந்தை என்று அழைக்கப்பட்ட பிரடெரிக் வின்ஸ்லோ டெய்லர் என்னும் மேலாண்மை வல்லுநர் மேலாண்மையின் வளர்ச்சிக்கும், தொழில் நிறுவனங்களின் உற்பத்திக்கும் உதவும் வகையில் பல மேலாண்மைக் கொள்கைகளை உருவாக்கினார். திட்டமிட்டு ஒரு செயலை செய்வதே மேலாண்மை என்ற கருத்தின் அடிப்படையில் எதிர்கால தேவைகளைக் கருதி சில குறிக்கோள்களை

நிர்ணயித்து அவற்றை அடைவதற்கான நடவடிக்கைகளை ஏற்படுத்துவதுதான் திட்டமிடலாகும். அவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## தலைமைத்துவம் மற்றும் உந்துதல்

தலைமைத்துவம் என்பது எண்ணங்களை ஊடுருவி மற்றவர்களை வழிநடத்தும் திறனைக் குறிக்கும். உந்துதல் என்பது ஒரு இலக்கை அடைய மனிதனை கட்டாயப்படுத்தும் உள் தூண்டுதலாகும். உதயணன் தன் மனைவி வாசவதத்தை இறந்து விட்டதாக எண்ணியிருந்த நிலையில், அவனது கனவில் குபேரன் அருளால் தனக்கு ஒரு மகன் பிறப்பான் என்று உணர்த்தப்படுகிறது. இதன் மூலம் உதயணன் தன்னம்பிக்கை வரும்படி இக்கனவு அமைவதை உணர முடிகிறது இதனை,

"நாற்கடலும்பர் நாக வேதிகைப்

பாற்கடற்பரப்பிற் பணித்திரை நடுவண்" (பெருங்கதை-3-5:65-80)

என்ற பாடல் வரிகள் வழியாக உணரமுடிகிறது.

தொடர்புத்திறன், பணிப்பகிர்வு, உணர்ச்சி நுண்ணறிவு, உறுதிப்பாடு இவை தலைமைத்துவத்தின் முக்கிய பண்புகளாக விளங்குகின்றன. தன் குடிமக்களிடமிருந்து அளவுக்கு அதிகமாக வரி வாங்கினான் அறிவுரை நம்பி. அவனுடைய செயல் அறிவுடைய செயல் இல்லை என்பதை,

"காய்நெல் அறுத்து கவளங் கொளினே

யானை புக்க புலம் போல,

தானும் உண்ணான்

உலகமும் கெடுமே"

(புறநானூற்றுப் பாடல்-184)

ஒரு சிறிய நிலத்தில் விளைந்த நெல்லை அறுத்து யானைக்கு கவளமாக கொடுத்தால் அது பல நாட்களுக்கு உணவாக அமையும். யானை தானே புகுந்து தின்றால் அது உண்பதை விட அதன் கால்களால் மிதிபட்டு அழியும் நெல்லே அதிகம். மன்னன் முறையறிந்து வரி வசூலித்தால் நாடும் செழிக்கும். ஆனால் முறை தவறி பேராசையுடன் மக்கள் மீது சுமையை ஏற்றினால், தானும் அனுபவிக்காமல் நாடும் அழிந்து போகும் என்ற பாடலில் தலைமைத்துவம் குறித்து பிசிராந்தையார் கூறுகிறார்.

## தொடர்பு திறன்

தகவல்கள், கருத்துக்கள், எண்ணங்கள் அல்லது உணர்வுகளை மற்றவர்களுக்குத் தெளிவாக, துல்லியமாக மற்றும் திறம்பட தெரிவிக்கும் திறமையே தொடர்பு திறனாகும். பரிமாற்றம், புரிதல், பயன்பாடு ஆகியவை இதன் முக்கிய அம்சங்களாக விளங்குகின்றன.

"நிலத்திலும் பெரிதே வானினும் உயர்ந்தன்று

நீரினும் ஆரளவின்றே சாரல்

கருங்கோல் குறிஞ்சிப் பூக் கொண்டு

பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"

(குறுந்தொகைப்பாடல்-3)

மலைச் சரிவிலுள்ள கரிய நிறமான கொம்புகளை உடைய குறிஞ்சி செடியின் மலர்களில் தேனை உறிஞ்சிக் கொண்டு வண்டுகளானது உயர்ந்த மரத்தில் தேன்கூடைக் கட்டும். அந்த வளமையான மலைக்குரியவன் நம் தலைவன். அவனோடு நாம் கொண்ட நட்பானது நிலத்தை விட பெரியது; வானத்தை விட உயர்ந்தது; கடலை விட ஆழமானது என்று தோழி தலைவயிடம் கூறுகிறாள். இதில் தலைவியின் உணர்வை தலைவனுக்குத் தெரிவிப்பது போல் கூறப்பட்டுள்ளது.

## பணிப்பகிர்வு

சங்க இலக்கியத்தில் புறநானூற்றுப் பாடலில் தன் குழந்தையை பெற்று வளர்த்தல் தாய்க்குக் கடமையாகும். குழந்தையை சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடமையாகும். வேல் போன்ற

ஆயுதங்களைச் செய்து கொடுத்தல் கொல்லனுக்குக் கடமையாகும். நாட்டு மக்களுக்கு நல்வழி காட்டுதல் அரசனுக்குக் கடமையாகும். போர்க்களத்தில் எதிரிகளை வீழ்த்தி, யானைகளைக் கொன்று வெற்றி பெறுதல் மகனுக்குக் கடமையாகும் என பணிப்பகிர்வு குறித்துக் கூறப்பட்டுள்ளது. இதில் உளவியல் ரீதியாகவும் ஒவ்வொருவருக்கும் உள்ள கடமை என்ன என்பதை விளக்கப்பட்டுள்ளது.

## நுண்ணறிவு

கலித்தொகைப் பாடலில் தலைவன் சென்ற பாலை நிலம் தாங்க முடியாத அளவிற்கு சுடும் காடு. அந்த காட்டில் யானைக்கன்று குறைவாக இருந்த நீரை கலக்கி விடும். தன் தாகத்தை முதலில் தீர்த்துக் கொள்ளாமல் தன் கன்றுக்கு ஊட்டி விட்டு எஞ்சிக் கிடக்கும் நீரை உண்ணும் களிறு. காட்டில் வெம்மைத் தாங்காது ஆற்றி இருக்கும் பெண் புறாவை ஆண் புறா தன் சிறகுகளால் விசிறிக் கொடுக்கும். காட்டில் நிழல் இல்லாமையால் பெண்மானுக்கு ஆண்மான் தன் உடம்பின் நிழலைக் கொடுத்துக் காப்பாற்றும்.

இவ்வாறு யானையும், மானும், புறாவும் தம் துணையைப் பேணுவதைக் காண்கின்ற தலைவன் தம்மைத் தேடி விரைவில் வருவார் என சூழ்நிலையின் அடிப்படைகளை வைத்து காதலை நிர்ணயித்து வாழ்ந்த மேலாண்மை நுண்ணறிவு செய்தி இதில் புலனாகிறது.

## உறுதிப்பாடு

நாம் செய்கின்ற செயலில் உறுதிப்பாடுடன் இருந்தால் மட்டுமே வெற்றி பெற முடியும் என்பதை,

“நீயே அமர்கானின் அமர்க்கடந்து அவர்

படை விலக்கி எதிர் நிற்றலின்

வாஅள் வாய்த்த விடுவாழ் யாக்கையோடு

கேள்விக்கு இனியை கட்சின் னாயே” ( புறநானூறு-167:1-5)

தலைவன் போர் என்றால் விடமாட்டான். பகைவரை கண்டுவிட்டால் அவர் படையை விலக்கிக் கொண்டு போய், அவர் முன்னே துணிந்து நிற்பான். அதனால் பகைவர்களின் வாள் நுனியால் பட்ட தழும்பு உன் உடம்பெல்லாம் இருக்கிறது. இப்படி நீ போரிட்டு வெற்றி பெற்ற வீரம் கேட்க இனிமையாகத்தான் இருக்கிறது. ஆனால் உன் உடலோ விழுப்புண்பட்டு அழகாயில்லை என ஏனாதி திருக்கிள்ளையைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடுவதில் இருந்து தலைவனின் மேலாண்மை உறுதிப்பாடு விளங்குகிறது.

## பணியாளர் தேர்வு மற்றும் பயிற்சி

சங்க இலக்கியத்தில் பணியாளர்களைத் தகுதி அடிப்படை, நம்பகத் தன்மை, சிறப்புத் திறன்கள், பரம்பரை முறையில் தேர்ந்தெடுப்பர். தகுதி, திறமை, அறிவுத்திறன் பணியாளர்களின் தகுதியாக விளங்கின. அரசனுக்கு விசுவாசமாக இருப்பவர்கள், நேர்மையானவர்கள் நம்பகத் தன்மை உள்ளவராக காணப்பட்டனர். தூதுவர்கள் பேச்சுத் திறமையும், படைவீரர்கள் வீரமும், அமைச்சர்கள் நுண்ணறிவும் உடையவர்களே சிறப்புத் திறன் கொண்டவர்களாக காணப்பட்டனர். குடும்ப பாரம்பரியமாகப் பணியாற்றுபவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன. இம்முறையில் பணியாளர்களை தேர்வு செய்வதை,

“எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்

வேறுஆகும் மாந்தர் பலர்”

(திருக்குறள்-அதிகாரம்: தெரிந்து வினையாடல்-குறள்:514)

எவ்வளவுதான் ஆராய்ந்து பணியாளர்களைத் தேர்வு செய்தாலும், அவர்கள் செய்யும் வேலையில் வேறுபடும் தன்மையுடையவர்கள். எனவே தேர்ந்தெடுத்த பின்பும் அவர்கள் மீது உளவியல் ரீதியான கண்காணிப்பு அவசியம் என்பதைக் கூறுகிறது.

## நிறுவன வளர்ச்சி மற்றும் மாற்றம்

சங்கக் காலத்தில் நிலவுடைமைச் சமூகம், நாளங்காடி - அல்லங்காடி போன்ற சந்தை முறைகள், சுங்க வரி வசூல் மற்றும் கைவினைத் தொழில்கள் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்ததை அறிய

முடிகிறது. வணிக மேலாண்மை, வள மேம்பாடு, சமூக படிநிலை மாற்றம், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றினால், இது ஒரு வளர்ந்த சமூக நிறுவனமாக விளங்குகியது. ஏற்றுமதி, இறக்குமதி வணிக பொருட்கள் மீது மன்னர்கள் வசூலித்த சுங்க வரி நிறுவனமயமாக்கப்பட்ட வர்த்தகம், வேளாண்மை முறையில் காணப்படும் உழுதல், விதைத்தல், பயிரிடுதல், நீர் மேலாண்மை முதலானவை நிறுவன வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது.

“மீன்விலை பரதவர் வெண்உப்போடு

கொள்ளைசாற்றி” (மதுரைக்காஞ்சி:500-510)

மீனை விற்கும் மீனவர் மீனை கொடுத்து, அதற்கு பதிலாக உப்பைப் பெற்று சென்றனர் என மதுரைக் காஞ்சியில் வணிக மேலாண்மை உளவியல் செய்தியாகக் கூறப்பட்டுள்ளது.

நீர் மேலாண்மை குறித்து சிறுபஞ்ச மூலத்தில்,

“குளம்தொட்டு காவு பதித்து

வழி சீத்து

உழந்தொட்டு உழு வயல் ஆக்கி வளம் தொட்டுப்

பாகுபடும் கிணற்றோடு என்று இவை

பார்ப்படுத்தால் சொர்க்கம் இனிது” (சிறுபஞ்சமூலம்:64)

குளம் வெட்டுதல், காடுகளை உருவாக்குதல், வழி அமைத்தல், உழவு நிலங்களை உருவாக்குதல், கிணறுகள் அமைத்தல் ஆகிய நற்பணிகளைச் செய்பவர்கள், இந்த உலகத்தில் வளத்துடன் வாழ்ந்து, பின் சொர்க்கத்தை அடைவர் என நீரின் மேலாண்மை குறித்த உளவியல் செய்தி காணப்படுகிறது.

புறநானூற்றில் நீர்நிலைகளாகிய ஏரி, குளம் ஆகியவற்றைப் பெருக செய்பவர்கள், இவ்வுலகில் நிலைத்த புகழைப் பெறுவர் என்றும், அவ்வாறு செய்யாதவர்கள் இவ்வுலகத்தில் எதையும் சாதிக்காதவர்கள் ஆவர் எனக் கூறப்பட்டுள்ளது.

## குழு இயக்கவியல் மற்றும் தொடர்பு

குழு இயக்கவியல் என்பது ஒரு குழுவின் வெற்றிக்குத் தேவையான உறுப்பினர்களுக்கு இடையேயான உறவுகள், நடத்தை வடிவங்கள் மற்றும் தகவல் பரிமாற்றத்தின் கூட்டு செயல்முறையாகும்.

சங்க இலக்கியத்தில் மக்கள் திணைச் சார்ந்த குழுக்களாக வாழ்ந்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம்,நெய்தல்,பாலை என்ற ஐவகை நிலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனி வாழ்க்கை முறை, தொழில் மற்றும் குழு அடையாளங்கள் இருந்தன. மேலாண்மை உளவியல் சார்ந்த கருத்துக்கள் அந்தந்த பகுதிக்கு ஏற்றார் போல் காணப்பட்டன. தனிமனிதன் என்பதை விட குழு அடையாளம் சார்ந்த சமூகமாக தொடர்புக் கொண்டு, இணைந்து வாழ்ந்ததற்கான சான்றாக சங்க இலக்கியம் விளங்குகிறது.

வேட்டையாடுதல், மீன்பிடித்தல், உழவுத்தொழில் செய்தல், கூட்டு வியாபாரம் செய்தல் ஆகியவற்றில் மக்கள் குழுவாக இணைந்து செயல்பட்டனர். “வாள் பிடித்து நின்ற குடி” என்ற வரி குழுவின் வலிமையைக் காட்டுகின்றது. ஐவகைத் திணையில் உள்ள குழுவினர்கள் தங்களுக்கென ஒரு விலங்கு, மரம், பறவை, உணவு, தொழில், தெய்வம் என அடையாளத்தை நிலைநிறுத்தினர்.

மன அழுத்த மேலாண்மைக் குறித்து,

“நயந்து நீ நல்குதியாயின் உயர்ந்தும்

உயர்ந்தன்று இவண் கண்ணே

பெய்தொறும் விசும்பின் மணந்த

கலி மழைச்சாரல் வான்பூங் காணல்

வதுவை நாறே” ( குறுந்தொகைப்பாடல்-228)

குறுந்தொகைப் பாடலில் தோழி, தலைவிக்கு ஆறுதல் கூறுவது போன்று, உளவியல் மேலாண்மை அமைந்துள்ளது. தலைவனின் பிரிவால் வாடும் தலைவியிடம் தோழி, தலைவன்

விரைவில் வருவான் நீ வருத்தம் கொள்ளாதே; கடல் அருகே பூக்கள் பூத்து மணம் வீசுவது போல, மன அழுத்தம் நீங்கி, இன்பம் விரைவில் வரும் எனக் கூறுவதாக உள்ளது.

## நடத்தை மேலாண்மை

சங்க இலக்கிய நூல்களில் நற்பண்புக் குறித்த செய்திகள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஒருவரின் ஒழுக்கமும், நடத்தையும் எப்படி மேலாண்மை செய்து கொள்ள வேண்டும் என்பதற்கான சிறந்த உதாரணங்கள் நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை போன்ற நூல்களில் காணப்படுகின்றன. வாழ்வியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டது ஒழுக்கமாகும். போற்றப்படும் ஆயின் வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என்றும் இவ்வொழுக்கம் இருபாலர்க்கும் பொதுவானது. குறுந்தொகை பாடலில்,

"யாரும் இல்லை தானே கள்வன்; தானும் பொய்ப்பின் யானெவன் செய்கோ?" (குறுந்தொகைப்பாடல்-25)

தலைவன் திருமணம் செய்ய காலம் தாழ்த்துவதால் வருந்தும் தலைவி, நாங்கள் கூடியிருந்த போது யாரும் சாட்சி இல்லை; தலைவன் மட்டுமே சாட்சி; அவன் பொய் உரைத்தால் நான் என்ன செய்வேன்? ஆரல் மீனை உண்ணும் நாரை மட்டுமே பார்த்து கொண்டிருந்தது என்று தலைவி கூறி வருந்துவதன் மூலம் தன் நடத்தை மேலாண்மை உளவியல் புலப்படுகிறது

## முடிவுரை

சங்க இலக்கியத்தில் காணப்படும் உளவியல் செய்திகள் அக்கால மக்களின் வாழ்க்கை சிறப்பு, மொழி சிறப்பு, பண்பாடு, ஒழுக்கம், தொழில் ஆகிய பல செய்திகள் காணப்படுவது சிறந்த மேலாண்மைக்குச் சான்றாக விளங்குகிறது. சங்ககாலம் முதல் இக்காலம் வரை உளவியல் சிறப்பினை இலக்கியங்கள் எடுத்து இயம்புவதாகவும் அதனுடைய தனித்தன்மையைக் காட்டுவதாகவும் உள்ளது.

## References

ஆ. மணவழகன், சங்க இலக்கியத்தில் மேலாண்மை, காவியா பதிப்பகம், சென்னை.

இரா.இராசாமணிக்கம், கலித்தொகை, பூம்புகார் பதிப்பகம், சென்னை.

பூவை அமுதன் திருக்குறள், கவிதா வெளியீடு, சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License